[28th August 1970

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதையும் முதன்மைக் கேள்வியுடன் இணைத்துக் கேட்டிருந்தால் அதுபற்றிய விவரங்களைத் திரட்டித் தந்திருக்க முடியும். ஆனால் முதன்மைக் கேள்வி வேறு. இப்போது கேட்கும் கேள்வி வேறு.

All India Radio, Madras.

4-20 p.m. *32. *Q.*—THIRU P. THIRUGNANASAMBANDAM : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether the Government are aware that while making announcements from All India Radio Station at Madras, they make use of the words "Akashvani, All India Radio, Madras" ; and

(*b*) whether arrangements will be made to make use of the words "All India Radio, Chennai"?

சென்னை வானொலி நிலையம்

திரு. பி. திருஞானசம்பந்தம் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னை வானொலி நிலையத்தில் இருந்து ஒலிபரப்பு அறிவிக்கும்போது ''ஆகாஷ்வாணியின் மதராஸ் வானொலி நிலையம் என'' அறிவிக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா ?

(இ) அதை மாற்றி ''சென்னை வானொலி நிலையம்'' என ஒலிபரப்ப ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம். அரசு அறியும்.

(இ) இது குறித்து மத்திய அமைச்சருக்கு நான் கடிதம் எழுதியுள்ளேன்.

திரு. பி. திருஞானசம்பந்தம் : தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசிற்குக் கடிதம் எழுதியிருப்பதாகக் கூறினார்கள். அவர்களிடமிருந்து பதில் கிடைத்துவிட்டதா ?

மாண்புமிகு திரு. மு.கருணாநிதி : இதுபற்றி 3—3—70-ல் மத்திய ஒலிபரப்பு அமைச்சர் திரு. சத்தியநாராயண சின்ஹா அவர்களுக்குக் கடிதம் எழுதப்பட்டது. 10—3—70-ல் அவர்கள் அக்கடிதத்தைப் பெற்றுக்கொண்டதற்கான குறிப்பு அங்கிருந்து வந்தது. பிறகு அதை நினைவுபடுத்தி அந்த இலாகாவுக்கு ஒரு கடிதம் இங்கிருந்து எழுதப்பட்டது. இதுவரையில் ஒப்புதல் கடிதம் எதுவும் அங்கிருந்து வரவில்லை.